Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per line 10
do per half col Rs 3 00
do per Column 5 00

# THE Hindu Organ

VOL 7. எ-ம்புத்தகம். | JAFFNA, WEDNESDAY APRIL 1, 1896 | இந்துசாதனம். | கலியுகஞூல் சசுகூள. சஅகக, ஏப்பிறில்மீ கஉ. | NO. 17 இலக்கள.

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## ACKNOWLEDGMENT.

The Manager of the Hindu Organ begs to acknowledge with thanks the receipt of the following remitances from subscribers:—

| Messrs. | | Rs. Cts. |
|---|---|---|
| A. Nagalingam | Valanai West | ,,-75 |
| T. Sathasivam | Nalloor | 1-50 |
| S. Sellappah | Do | ,,-50 |
| K. Appappillai | Tinnevely | ,,-50 |
| S. Duraiswamy | Town Jaffna | 1-50 |

## NOTICE.

From the 15th Instant morning tea will be provided at the Pallai Resthouse at the following rates to passengers going by the Jaffna Matale Coach.

| | |
|---|---|
| For occupation | Rs ——10 cts |
| A cup of tea and sugar | ,, ——25 cts |
| Tea with milk and sugar and bread and Jam or butter and 2 eggs (if previously ordered by letter) | ,, ——60cts |

Provl: Road Committee's Office
Jaffna 1st April 1896

G. W. WOODHOUSE
for R. W. Ievers
Chairman P. R. C.

WARD (NAVALAR AND KOTAM) DAVY

## JAFFNA.

| | |
|---|---|
| Ready made Coats- Austrian checks | 2/00 |
| do do ... English checks | 4/50 |
| Boys Coats | 1/25 |
| do Black Merino | 3/50 |
| Best Lisle Thread Banian | 3/00 |
| Best India Gauze | 2/00 |
| Boys Banian the Best | 1/00 |
| Flannel Shirts | 3/50 |
| Cheap fancy austrian Trunks with patent Lock duplicate Keys | 5/00 |

Always in stock all important English Medicines and drugs, Fixed Reasonable rates for wholesale and retail.

Specimen Prices—

| | |
|---|---|
| Howards Quinine(கல்ல குயினின்) oz bottle | 2/00 |
| Spirit AEther Nitrosi(வாணத்திராவகசரசம்) oz | /25 |
| Tinct Opii (அபின் ரசாயனம்) | /25 |

இங்கிலிஷ் மருந்துகள்.

| | |
|---|---|
| சிரங்குச்சவுக்காரம் | ,,/25 |
| பல்லுப்பொடி நல்லசுகந்தமானது | ,,75 |
| சன்னிரசாயனம்- தோற் புரையிலுள்ள ரோகங்களுக்கும் இரத்தசுத்திக்கு மேகச் சூட்டுக்கும் நல்லமருந்து | 2/00 |

நல்ல சுத்தமான இங்கிலிஷ் மருந்துகள் வேண்டுவோர் நாவலர்விட்டில் வாட் அன் டேவி ஷாப்பில் பெற்றுக் கொள்ளலாம். விலை மிகச்சகாயம். ஒரேவிலை.

## IN THE DISTRICT COURT OF JAFFNA

Order Nisi.

Testamentary Jurisdiction } No.728
Class I

In the Matter of the Estate of the late Murukar Ampalavaner of Karaitivu East
Deceased

Nakamuttu widow of Ampalavaner of Karaitivu East
Petitioner

Vs

Arumukam Velaiyutar of Karaitivu East
Respondent.

This matter of the Petition of Nakamuttu widow of Ampalavaner of Karaitivu East praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Murukar Ampalavaner of Karaitivu East coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 6th day of March 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 6th day of March 1896 having been read, it is declared that the Petitioner is the lawful widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondent or any other person shall on or, before the 10th day of April 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 6th day of March 1896
H. H. Cameron
District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA

ORDER NISI.

Testamentary Jurisdiction } No .735
Class I

In the Matter of the Estate of the late Mira Meyatin Nachchiya wife of Mukammedu Mira Lebbai of Vannarpannai
Deceased.

Mukammadu Mirankandu Meyatinkandu of Vannarpannai
Petitioner

Vs.

1. Cheku Meyatin Mokammadu Miralebbai of Vannarponnai
2. Ayisa Umma wife of Meyatinkandu of do
Respondents

This matter of the Petition of Mukammedu Mirankandu Meyatinkandu of Vannnarpannai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Mira Meyatin Nachchiya wife of Mukammadu Mira Lebbai of Vannarpannai coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 16th day March 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 12th day of March 1896 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 27th day of April 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 16th day of March 1896
H. H. Cameron
District Judge

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction } No. 737
Class III

In the Matter of the Estate of the late Chuvaminatar Iramalinkam of Elutumadduval North
Deceased

Nakamuttu widow of Iramalinkam of Elutumadduval North
Petitioner

Vs

Kanapatiyar Veluppillai of Elutumadduval South
Respondent

This matter of the Petition of Nakamuttu widow of Iramalinkam of Elutumadduval North praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Chuvaminatar Iramalinkam of Elutumadduval North coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 18th day of March 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 16th day of March 1896 having been read, it is declared that the Petitioner is the lawful widow of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to her unless the Respondent or any other person shall on or, before the 27th day of April 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 18th day of March 1896
H. H. Cameron
District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA

Order Nisi.

Testamentary Jurisdiction } No, 725
Class I

In the Matter of the Estate of the late Chinnattankam wife of Chinnaiya of Vannarponnai
Deceased

Nannittampi Tampoo of Kopai South
Petitioner

Vs

1. Chuvaminather Chinnaiya of Vannarponnai
2. Tillaivanam wife Tampoo of Kopai South
Respondent

This matter of the Petition of Nannittampi Tampoo of Kopai South praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Chinnattankam wife of Chinnaiya of Vannarponnai coming on for disposal before H. H. Cameron Esquire, District Judge, on the 5th day of March 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 4th day of March 1896 having been read, it is declared that the Petitioner is the husband of the heir of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 9th day of April 1896 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 5th day of March 1896
H. H. Cameron
District Judge.

## IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Jurisdiction } No 743
Class II

In the Matter of the Estate of the late Valli wife of Kanapati Putan of Nirveli
Deceased

Putan Narani of Palali
Petitioner

Vs

1. Kanapati Putan of Nirveli
2. Ampalavan Murukan of do and his wife
3. Periyanachchi of do
Respondents

This matter of the Petition of Putan Narani of Palali praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Valli wife of Kanapati Putan coming on for disposal before H. H. Cameron Esquire District Judge, on the 30th day of March 1896 in the presence of Messrs Casippillai & Cathiravelu Proctors on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 27th day of March 1896 having been read, it is declared that the Petitioner is one of the heirs of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 30th day of April 1896 how sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 30th day of March 1896.
H. H. Cameron
District Judge.

உ

கணபதி துணை.

வாழ்கவந்தணர்வானவரானினம்.........
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக.........
ஆழ்கதீயதெல்லாமரனாமமே.........
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே.........

# விளம்பரம்.

## முடிக்குரியகாணிவிற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கின் வலிகாமம் கிழக்குப்பகுதியைச் சேர்ந்த கோப்பாய் தெருவில் நாலு துண்டும், வலிகாமம் வடக்கைச்சேர்ந்த மல்லாகத்திலொருதுண்டும், தென்மராட்சியைச்சேர்ந்த நாவற்குளியில் இரண்டுதுண்டும், தீவுபற்றைச்சேர்ந்த அல்லைப்பிட்டியிலொருதுண்டும், பச்சிலைப்பளியைச் சேர்ந்த வண்ணான்கேணியிலிரண்டு துண்டுமாக முப்பத்தெட்டு ஏக்கர், இரண்டுறூட், இரண்டுபேட்சுக்கொண்ட பத்து முடிக்குரிய காணித் துண்டுகள் இத்தமீ௳ கஙஉ புதன்கிழமை மத்தியானம் கஉ மணிக்கு ஏக்கரொன்றுக்குப் பாணிப்புவிலை ரூபா பத்துவீதமாக யாழ்ப்பாணம் கச்சேரியில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இந்தக் காணிகளைப்பற்றிய மேலதனமானவிபரங்களைச் சேர்வையர் ஜெனறல்துரையவர்களிடத்தும் விற்பனவின் தொகைசைப்பற்றி யாழ்ப்பாணம் அசிட்டிங்கு கவண்மேந்து ஏசண்டுத்துரையவர்களிடத்தும கேட்டறியலாம்.

| | |
|---|---|
| யாழ்பாணம்கச்சேரி<br>கஅகூகூ௵<br>சித்திரைமீ௳ கவ. | G. W. Woodhouse<br>for R. W. Ievers<br>அசிட்டிங்கவண்மேந்தஏசன்று |

### வேண்டும்! வேண்டும்!

கயிறுதீவுச் சைவத் தமிழ்வித்தியாசாலைக்கு உத்தரவுபபத்திரம் (License) பெற்ற அல்லது தராதலப்பத்திரம் (Certificate) பெற்ற ஒருஉபாத்தியாயர் சித்திரைமீ௳ ருவக்குமுன் வேண்டும்' விரும்புபவர் சம்பளம்முதலியவைகளைக்குறித்து இந்துசாதன மானேசரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: மன்மதஹு பங்குனிமீ௳ உகவ

## தமிழ். க.

—:o:—

நம்முடைய இந்தநாடு தமிழ்நாடு. நாங்கள் தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழிலே அமிழ்ந்தியுள்ளோம். அதிலும் இவ்வியாழ்ப்பாணம், செந்தமிழுக்கு வரம்பாயுள்ள வித்துவான்கள் பலரிருந்தமையினாலே, பெருங்காவியங்களிலும் சங்கத்துநூல்களிலும் அருகிவழங்கும் சொற்களும் இலக்கணவிதிகளும் சாதாரணமாகப் பெண்டுகளுடைய பேச்சிலும் வழங்குந் தேசம். அப்படிப்பட்ட இவ்வியாழ்ப்பாணத்தில் அரசினருடைய உதவிபெறும் பள்ளிக்கூடங்கள் கூ௦அம் உதவிபெறாத பள்ளிக்கூடங்கள் கஉகூமாக சஙச தமிழ்ப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. இந்த சஙச லிலும் கஅகூச ம் வருஷத்திற் கற்ற பிள்ளைகள் தொகை உகூஉசக. பிள்ளைகளுடைய தேர்ச்சியைக் கண்டு அரசினர் உதவி செய்யத் தொடங்கியும் உரு வருஷங்களுக்கு மேலாயிற்று. இந்த உரு வருஷகாலத்தில், இந்தத் தேசத்தில், அரசினருடைய பெயரால் அவர்களுடைய உதவிபெறும் பள்ளிக்கூடங்களிற் கற்றுத் தேறி எத்தனைபேர் பண்டிதர்களாயும் வித்துவான்களாயும புலவர்களாயும் பிறபிற பட்டங்கள் புனைந்தவர்களாயு மிருக்கின்றார்களென்பதை ஒருகாற் பார்ப்பது அவசியமாயிருக்கின்றது. இந்தவிஷயத்தில் அரசினர் நம்முடைய இறைப்பணங்களிலிருந்து பெருந்தொகை எடுத்துச் செலவழித்துப்போடுகின்றார்கள். செலவழித்தும் அதனால் என்னபயன்! இந்த உரு வருஷத்தில் இங்கிலிசிலோ அபரிமிதமான தேர்ச்சியுண்டாயிருக்கின்றது. முன்னே F. A. பரீக்ஷையிற் சித்திபெற்ற இரண்டொருவர் இன்னுமப்பெயரால் வழங்கப்படுகின்றார்கள். இப்பொழுதோ திரள் திரளான F. A. களை வருஷந்தோறுங் காண்கிறோம். "கேம்பிறிஞ்சு லோக்கல்" பரிக்ஷையில் சித்தியடைபவர் தொகை பத்துவருஷத்துள் ஐந்துமடங்கதிகமாய்விட்டது. இனிச் சிங்களமோவெனின், அதுவுந் தமிழளவு பழுதன்று. தமிழிலே அரசினருடைய உதவியினாலே தேறிப் பட்டம் பெற்றவரேனும் அல்லது பிழையில்லாமல் எழுதப் பேசத் தெரிந்தவரேனும் அல்லது பிழையில்லாமல் வாசிக்கத்தானுந் தெரிந்தவரேனும் ஒருவருமிலை இல்லை. இதற்குக் காரணம் என்ன. முதல் வித்தியாகர்த்தருக்கு நம்முடைய சுதேசபாஷை அந்நியபாஷையாயிருத்தல். இரண்டாவது நம்முடைய தேசத்துக்குப் பரீக்ஷகர்களாய் வருகிறவர்கள் எப்போதும் தமிழுக்கு அந்நியபாஷைக்காரராயிருத்தல். மூன்றாவது தமிழர்களுள்ள இடங்களிலிருப்பனவாய் அரசினருதவி பெறும தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் கஙூ௦ இல், சைவர்களுடையனவாயும் "பிறைவேற் ஸ்கூலா" யும் மகமதியருடையனவாயு முள்ள உள நீக்கி மிசசயாயுள்ள கூ௦ங பள்ளிக்கூடங்களும் தமிழ்ப்பாஷைக்கு அந்நியராயுள்ள பல்வகைக் கிறிஸ்தவருடையனவாயிருத்தல். விசேஷமாக இம்மூன்றேதுக்களாலுமே தமிழ் குறைய நேர்ந்தது.

நமக்குத் தமிழ் சுவபாஷை, இங்கிலிசு அந்நியபாஷை. அப்படியிருந்தும நம்பிள்ளைகள் இங்கிலிசு படிக்கிறதாலை அதன் இலக்கணம் மூன்றாம்வகுபபினும் தமிழ் படிக்கிறதானல் அதன இலக்கணம ஆறாம்வகுப்பினும் படிக்க அரசினர் விதித்திருக்கிறார்கள். இது இயல்புக்கு முழு மாறு. தமிழ்ப்பிள்ளைகள் தமிழிலக்கணத்தையும் இங்கிலிசுபபிள்ளைகள் இங்கிலிசு இலக்கணத்தையும் முன் வகுப்புக்களிலும், தமிழ்ப்பிள்ளைகள் இங்கிலிசு இலக்கணத்தையும இங்கிலிசுப்பிள்ளைகள் தமிழிலக்கணத்தையும் பின் வகுப்புக்களிலும் கற்றலே முறையாகும். அரசினர் இந்தமுறையைப் பிறழவைகதுக்கொண்டார்கள். இஙகிலிசுகாரர் எழுதும் இங்கிலிசை வாசிக்குந் தமிழர் அநேகமாயுளரேயன்றி,தமிழர் எழுதும் தமிழை வாசிக்கும் இஙகிலிசுகாரர் மிகக் கொஞ்சப்பேராகும். தமிழருக்குத் தமிழர் எப்படிப் பிழையாயெழுதினாலும் பேசினாலும்ஒருவாறு கருத்துப் பிடிபட்டுபபோகிறபடியால் அதனைக் கவனிக்கிறவர்களில்லாமற் போகின்றது. அல்லது, இந்த அரசினரிடத்தினின்றும் அநியாயமாகப் பெருந்தொகைப பணத்தை வாங்கி மானேசர்மாருக்குக் கொடுதது அரசினருதவியாற் படித்த பிள்ளைகளெனப்பட்டவர்கள் எழுதுவன பேசுவனவற்றிலுள்ள பிழைகள் எவ்வளவென்பது நன்றாகத்தெரியும். இவாகள் தமிழுக்கும் ஒருபிராகிருதம் விரைவிற் செய்யவல்லவராவர்.

இவற்றிற்கெல்லாம் காரணம் தமிழிற் சிறந்த வித்துவான்களுடைய உதவி சிறிதேனும் வித்தியாபகுதியாருக்கு இல்லாமையேயாம். சிங்களவர்கள் சமீபத்திலிருக்கிறபடியாலும் அவர்களுள்ளேயுள்ள வித்துவான்கள் தங்களை அரசினருக்குக் காட்டிக்கொடுக்கின்றமையினாலும் அவர்களை இவர்கள் அடிக்க உசாவிக்கொள்ளுகின்றார்கள. நாங்களோ மி த்தூரத்திலிருக்கின்றோம். நம்முடைய பள்ளிக்கூடத்திற் படிபபிக்கப்படும் சில புத்தகங்களோ சர்வாபத்தக்களஞ்சியமாயிருக்கின்றன. பிள்ளைகளுடைய கல்வித்தேர்ச்சியைத் தேடுவாரில்லை: எவ்வளவுக்குப் பாடங்கள் இலகுவாயிருக்குமோ அவ்வளவுக்குஅவை உபாத்தியாயர்களுக்கும் மானேசர்மாருக்குக் கற்பிக்க இலகுவாயிருக்கும்;பரீக்ஷகர்களுக்குப் பரீக்ஷிக்கவும் இலகுவாயிருக்கும். இந்தவொழுங்குதான் இப்போதிங்கு அநுசரிக்கப்பட்டுவருவது. அரசினருடைய உதவி, அவரேற்படுத்தியிருக்கும் எட்டுத்தரங்களினாலும் பிள்ளைகளுக்குத் தமிழில் மேலான நூல்களைக் கற்கும் ஆசையைக் கிளர்வியாதொழிந்தாலும், பிழையில்லாமல் எழுத வாசிக்கவேனும் செய்யவேண்டாமா. அரசினர், பரீக்ஷிக்கப்படும் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வோர் தொகை கொடுக்க நியமித்திருக்கின்றார்களே.அப்படிக் கொடுக்கும் பணத்தில் தமிழ் இலக்கணத்தேர்ச்சிக்காகக் கொடுபட்டிருக்கும் தொகையை வித்தியாகர்த்தர் பிரித்துக் கூட்டிப்பார்ப்பாராயின் இலக்கணக்கல்வி மிகக் குறைவென்பதை நன்கு உணர்வர்.

### சைவவித்தியாசாலை உபாத்தியாயர் கூட்டம்.

சைவவித்தியாசாலை உபாத்தியாயர்களுடைய கூட்டம் இந்தமுறை இந்துகாலேசில் க௦வ சனிக்கிழமை இரண்டுமணிக்குக் கூடிற்று. நாற்பத்தொன்பது பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்கள் இதற்கு வந்திருந்தார்கள். போனவருஷங் கூடிய உபாத்தியாயர்களால் வரிக்கப்பட்ட ஆயத்தசபையார் தாங்கள் அறிந்த எழுபத்தெட்டுப்பள்ளிக்கூடங்களுக்கு, அங்கே படிக்கும் பிள்ளைகள் தொகை படிப்பிக்கும் உபாத்தியாயர் தொகை படிப்பிக்கும் பாடங்கள் என்ன என்னுமிவற்றை அறியும்பொருட்டு ஒருகடிதமெழுதி யனுப்பினார்கள். அவற்றுள் கூரு பள்ளிக்கூடங்களிலிருந்து அவர்களுடைய கேள்விகளுக்கு விடை வந்தன. இவற்றுளொன்று முழுது மிங்கிலிசுப் பள்ளிக்கூடம்; ஆறு இங்கிலிசுந் தமிழும் படிப்பிக்கப்படுவன, ஒழிந்தவை முழுதுந் தமிழே படிப்பிப்பன.

அன்று கூடிய இச்சபைக்கு ஸ்ரீ. த. கைலாசபிள்ளையை அக்கிராசனாதிபதியாக வரித்தனர். வரித்துக்கொண்டபின் சென்றவருஷக் கூட்டத்து வர்த்தமானம் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. மேலே சுட்டிய கூரு பள்ளிக்கூடங்களிலும் களஅ உபாத்தியாயர்கள் படிப்பிக்கின்றார்கள்; படிக்கும் பிள்ளைகள்தொகை சருகூஉ. இந்த கூரு னுள் உகூ பள்ளிக்கூடங்கள் மாத்திரம் அரசினருடைய உதவிபெறுகின்றன. மற்றை நகூ பள்ளிக்கூடங்களிற் படிக்கும் பிள்ளைகளுக்கு அரசினருடைய உதவி சிறிதேனுமில்லை.

இக்கூட்டத்துக்கு வந்த உபாத்தியாயர்களெல்லோரும் தங்கள் தங்களுடைய பள்ளிக்கூடங்களிலுள்ள குறை நிறைகளைப்பற்றியும், இப்பள்ளிக்கூடங்களைச் சை. ப. சபையாரேனும் பிறரேனும் வருஷத்தில் ஒருதரம் இருதரம் பரீக்ஷிக்க வேண்டுமென்பதைப்பற்றியும், தமிழ்ப்பாஷையினுடைய ஜீர்ண ஸ்திதியைப்பற்றியும் செப்பமாகப் பேசினார்கள். அக்கிராசனாதிபதி, எல்லாருடைய பேச்சையும் சுருக்கமாக எடுத்துக்காட்டி, தமிழுக்கு ஒருசங்கம் ஏற்படுத்தும்பொருட்டுச் சில பண்டிதர்களுக்கும் பெரியோர்களுக்கும் செய்த விண்ணப்பத்தை வாசித்துக்காட்டி எப்படியும் இதற்கு மற்றவருடத்துக்குள் ஒரு அத்திபாரம் இடுதல்வேண்டுமென்றும் இடலாகுமென்றும் பேசினார்கள். அதன்பின் இக்கூட்டத்தார் இவ்விஷயங்களை முடிக்கிறதற்காகவும் மற்றச்சபைக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்கிறதற்காகவும் ஒருசபையை வரித்து ஒழுங்குசெய்துகொண்டனர். இது ஆறரைமணிவரையில் நடந்தது. பின் தேவாராதி பாராயணஞ்செய்து கூட்டம் பிரிந்தது.

### பொலிசுமாருட் கலகம்.

இங்குள்ள பொலிசுமாருள் ஏறக்குறைய அறுபது பேர் வரை சேர்ந்து கையெழுத்திட்டு "பொலிசு சுப்பறின்றெண்டெண்டு"க்கு ஓர் விண்ணப்பமனுப்பியிருக்கிறதாகக் கேள்விப்படுகின்றோம். அதில் அவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்ட நேரத்துக்குமேலே வேலை செய்விக்கிறார்களென்றும் அதிகமான யுத்தப்பயிற்சி (Parade) செய்வித்தலினாலதிக சிரமமடைகின்றேம் என்றும் காட்டியிருக்கிறார்களாம. அவ்விண்ணப்பத்தை நாம் பாராதபடியால் அதைக்குறித்துச் சரியான அபிப்பிராயம் கொடுக்க முடியாது. அவ்விண்ணப்பத்தின்பின் அவர்கள் முன்னிலும் அதிக இம்சையடைகிறதாகவும் தோன்றுகின்றது. இப்பொலிசுமார் செய்யும் வேலையைப் பரிசோதனைபண்ணச் "சுப்பறின்றெண்டெண்"டேனும் "இன்ஸ்பெக்றர்"ரேனும் எந்தக் காலத்திலேனும் வெளியேவந்ததைக் கண்டதருமை. அவருள் இன்ஸ்பெக்றர் இருக்கிறதுந்தெரியாது. இது மெஸ். றட்டுடைய காலம்போலிருக்கவில்லை. இப்படிப்பட்ட மேலுத்தியோகத்தர்கள் பொலிசுமார் செய்யும் வேலையின் குறைமிகைகளை அறிவது எப்படி. இனிப் பொலிசுமாருள்ளே, காவலுக்கு வந்தபோது களவவீடுகள் நிகழ்ந்தனவே தடவாத பொலிசினர் மிகச்சிலபேர். இந்தநிலைமையைச் சுப் றின்றெண்டெண்டு முதலானவர் முதற்றடுப்பார்களானால் அது அவர்களுக்கும் ஊரவர்களுக்கும் பேருபகாரமாகும். தவறுனைகளிருக்குமிடங்களில் நடக்கும் கலகங்களுட் பல பிடிபடாமைக்குக் காரணம் பொலிசினருடைய இத் துர்க்கிரியையேயாம். சுப்பறின்றெண்டெண்டு முதலானவர் காவலிலுள்ள பொலிசினருடைய முகத்தைச் சடுதியிற்போய் யணப்பார்களானல் இது இலகுவிலறியலாம். இவற்றைவிடுத்து அற்பகாரியங்களில் அவர்களை நெருக்குவது சிறப்பாகாது.

## சமாசாரம்.

காலநிலை:—வெய்யிலதிகம்.சென்ற சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு சிறுமழை பெய்ததாயினும் அதனாலதிக உபயோகமில்லை. சிரங்கு சின்னம்மை முதலிய நோய்களதிகரித்தே வருகின்றன.

ரதோற்சவம்:—வண்ணைவைத்தீஸ்வரன்கோயிலில் சென்ற வெள்ளிக்கிழமை ரதோற்சவமும் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடந்தன.

விவாகம்:—இந்தமாசம் முழுவதும் எங்கேபார்த்தாலும்விவாகக் கொண்டாட்டமாயேயிருக்கின்றது.

எங்கள்கலெக்டர்துரை:—இவர் மன்னார் வவுனியா முதலிய இடங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு முல்லைத்தீவுப்பகுதிக்குப் போயிருக்கிறாராம்.

"தச்சபாதேசி":—நல்லூர்க்கந்தசுவாமி கோயிலிலிருந்து ஊரிற் பணந்தண்டி அக்கோயிற் பணியிற் சிலவற்றைச் செய்வித்த இப்பரதேசியும் சென்றவாரத்தில் தேகவியோகமெய்தலாயிற்று.

நூதனசிசு:—யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் சமீபத்திலே சென்ற வியாழக்கிழமையிரவு இரண்டுதலை, மூன்றுமுக்கு, ஆறுகை, நான்குகால், ஒரு உடல் பொருந்திய ஒரு பெண்குழந்தை பிறந்து ஆறுநாட் சீவித்து உயிர்துறந்தது.

கடி.

தூங்கியிறத்தல்:—புலோப்பழையிலே கந்தர் காசமுத்து என்பவர் ஒருபுளியமரத்தில் தூங்கியிறந்து விட்டார். அதுகண்ட அவர்மனைவியுமவ்வாறே தூங்கியிறந்தனள்.

பரிதாபக்கொலை:—வடமராட்சியைச்சேர்ந்த நெல்லியடித்தில் ஒருபையன் வித்தியாசாலைக்குச்சென்று வீடுவந்து சிலநேரத்துள் அப்பையனின் சிரசறுக்கப்பட்டு ஒரு மக்கிக்கிடங்குக்குள் புதைக்கப்பட்டிருந்தது. இக்கொலை தாயாலும் அவளுடைய சோரநாயகனுகிய ஒரு அம்பட்டனாலும் செய்யப்பட்டதென்று கோட்டில் விசாரணை நடக்கிறது.

மெஸ் ஜே கா சிச்செட்டியார்:—இவர் புத்தளத்தைச்சார்ந்த சலாபத்துப் பொலிசுநீதிபதியாக நியமனம்பெற்றார். அங்குப் போகுமவரையும் சாவகச்சேரி பகுத்திநீதிமன்றக் கோடுகளிலேயே வேலைபார்த்துவருவர்.

எந்நேரனி சென்றல்:—இவ்வுத்தியோகத்தவராகிய கௌரவ. லேயட் துரை சித்திரைமாசத்திலே இங்கிலாந்துக்குச் செல்லவிருப்பதால் இவ்விடத்துக்கு கௌரவ ஸ்ரீ. பொ. இராமநாதரவர்களும், இவரிடத்துக்கு மெஸ். தெமபிளரும் நியமிக்கப்பட்டார்கள்.

சேர். ஆதர். அவலக்:—இலங்கையை அரசாண்டு இப்போது சென்னை இராசதானியை ஆளக் கையேற்ற சேர். ஆதர். அவலக் தேசாதிபதிக்கு "Knight Grand Commander of the Order of the Indian Empire" என்னும் மகத்துவப் பட்டங் கிடைத்திருக்கிறது.

மிஸ்ஸன்லீச்சுக்கள்:—

இவர்கள் யாழ்பாணத்தவருடைய நன்மைக்கென்று வேடங்கட்டி நல்லவிடம்பார்த்து இணுவிலிற் கட்டும் வைத்தியசாலையைச் சமயம்பார்த்துப் பாதிரிமாரிடத்தில் ஒப்பித்துவிட்டார்கள். இனி இவ்வைத்தியசாலைக்குப் போகும் நோயாளிகளுக்குக் கிறிஸ்துசமயம் போதிக்கப்படுதலையும் சைவர்கள் மரணகாலங்களில் மிக்க பயமடைகின்றார்கள், கிறிஸ்துநாதரை அடைந்தவர்கள் வெகுசந்தோஷமாகப் போகின்றார்களென்று மாறுகப் போதிக்கப்படுதலையுங் காண்போம்.

இலங்கையிலுமலஞ்சம்பஞ்சமா!:—இந்தியாதேசத்தோடு பழகினமையாற் போலும் நந்தேசத்து உத்தியோகத்தருட் சிலரும் லஞ்சம் வாங்கப் பழகிக்கொண்டார்கள். இவ்வெளிய செய்கை எவ்வளவு அவமானத்தை வருவிக்குமென்பதைச் சிந்திக்கின்றார்களில்லை. அதிக லஞ்சம் வாங்கும்பகுதி ரேகுஉத்தியோகமே. யாழ்ப்பாண ரேகுச் சிறுப்பருக்கும் ஒரு காட்டுக்கோட்டைச் செட்டியாருக்குமிடையே இதனாலுண்டாகியகலகம் மேலதிகாரியின் விசாரணைக்குப் போயிருக்கிறதெனவறிகிறோம்.

அன்னியர்காட்டம்:—சிலதினங்களாக நாலைந்து அந்நியதேசத்தார்கள் வேஷமாறித்திரிகிறார்களாம். இவர்கள் பகலில் அதிகமாக வெளிவருவதில்லை. இவர்கள் கள்ளரோ, யாரோ தெரியவில்லையேயென்று அநேகர் பயந்து விழிப்பாயிருக்கின்றார்கள். நமது பொலிசினர் இதைக் கவனிக்குங் கடமையுடையராயினும் சுப்பறின்றெண்டெண்டுத்துரையும் இன்ஸ்பெக்றர்த்துரையும் வேறுபல வேலைக் கஷ்டங்களாற்போலும் வெளிவராதிருக்கின்றார்கள். ஊரில் என்ன நடக்கின்றனவென்பது அவர்களறியவேமாட்டார்கள்.

நெல்விளைவு:—மட்டக்களப்புப்பகுதியிலே இம்முறை நெல்விளைவு மிகத்திறமாம்.

சிதம்பராலயத்தில்லக்ஷதீபமேற்றல்:— வருகிற சித்திரைமீ உருவ, வனையமாதேவி ஸ்ரீ. சின்மயானந்தசாமி, பண்ணுருட்டி ஸ்ரீ ந. மு. வேதாசல முதலியார் என்பவர்கள் ஏற்றப்போகிறார்கள். இதற்குச் செலவு உ0000 ரூபா.

கடிதர்க்குவிடை:—மானிப்பாய் மருதடிவிநாயகராலயத் திருப்பணிக்கென்று மாத்துறையாதியாமிடங்களில் பணஞ்சேகரிப்பவர் அவ்வாதீனத்தைச் சார்ந்தவராயிருந்தாலும் சேகரிக்கும்பொருள் திருப்பணிக்காகுமென்று சொல்லத்திடமில்லை. இந்துமதாலய வரும்படிச்சட்டம் உண்டாகுமளவும் கோயில்களுக்குக் கொடுப்பதை நிறுத்திக்கொள்வது புத்தி.

---

## கடிதம்.

---

வைதிகசைவசுத்தாத்துவித

### சைவ சித்தாந்த சமயம்.

(௬௩-ம் பக்கத்தொடர்.)

—:o:—

சூதசங்கிதை,

(C) க்ஷரம்மாயாசாக்ஷரஞ்சீவரூபம்க்ஷராத்மாநாவீசதேதேவஏக:।

(இ—ள்.) க்ஷரமாயுள்ளது பாசம் (மாயை), அக்கரமாயுள்ளது ஆன்மா (பசு), பாசம் பசு என்னும் இரண்டையும் ஏகராகிய சிவனே ஆளுவாராயினர். இதனால் இந்த ஆன்மாவுஞ் சிவனும் ஏகான்மவாத சாங்கியயோகத்துட்பட்ட மித்தையாம் ஈசுவரால்லரென்பது பெறப்படும். இன்னும் ஸ்காந்தத்துட்பட்ட உபதேசகாண்டம்

D அசடோய:பசு:ப்ரோக்தஸ்சோக்ஷாப்பரிகீர்த்தித:। பாசப்புரோக்தோசடோயோயஞ்சக்ஷரப்பரிகீர்த்தித: க்ஷராக்ஷரபரச்சம்புஸ்திரயோப்யேதேக்யநாதய:॥

(இ—ள்.) சடமல்லாதது பசுவாம், இது அக்கரமென்று சொல்லப்படும்; சடமாயுள்ளது பாசம், இது க்ஷரமென்று சொல்லப்படும்; அக்கரமும் க்ஷரமுமாகிய ஆன்மாவுக்கும் பாசத்துக்கும் நியந்தாவாதலில் பரமாகிய சம்புவானவர் க்ஷராக்ஷரரெனப்படுவர். இப்பதி பசு பாச மூன்றும் அநாதியவாம் என்று கூறிற்று, இக்கருத்துக்கொண்டே தமிழிலே போந்த உபதேசகாண்டமும்,

அப்பரிசினதியுமதிவாங்கதனுவதிபொருணின்றதியப்பெற்றோ, னிப்படிமூன்றளவிறந்தமூன்றிலதிபொருண்மூன்றுயிருக்குமனனே, செப்பிலசடஞ்சடமென்றிரண்டிவற்றைக்கொடுசரிக்கச்செய்யாநின்ற. தொப்பிலகருத்தாவென்பதொன்றுகமூன்றிவற்றையுணரக்கேண்மின்.

இனியவற்றையும்டசுபாசம்பதியென்றியம்புவர்மற்றதிந்தமூன்றி, னினையுமசடம்பசுவச்சடம்பாசமிவைதனிந்றவனிமலனுகு, மனையமூன்றினையுமற்றையநாதியென்றுசொலப்படுமாலறிகிரென்ருன், புனையுமெடுஞ்சடைமோலிச்சூனகஃ துணர்ந்தவப் புனிதர்சொல்வார்.

இவ்வாறு கூறிற்று. வாயுசங்கிதை,

(E) அக்கரம் பசுரித்யுக்த:க்ஷரம்பாசஉதாக்ருத:। க்ஷராக்கரபரம்யத்தத்பதிரித்யபிதீயதே॥

(இ—ள்.) அக்கரம் பசு (ஆன்மா) க்ஷரம் பாசம், பசுபாசமிரண்டுக்கும் வேலாயுள்ளார் (சிவனுகிய) பதி எனப்படுவர் என்று கூறிற்று. மேலும் வேதமானது,

(F) க்ஷரந்த்வவித்யாக்யம்ருதந்துவித்யாவித்யாவித்யேதாசதேயஸ்துசோந்ய:॥

(இ—ள்.) க்ஷரமானது பாசம் (அவித்தை), அமிர்தமாகிய (அக்ஷரமாய்) உள்ளது பசு (வித்தை), இந்தப் பசுபாசமென்னும் இரண்டையும் வேறாய் ஆளுபவர் எஞ்சிநின்ற சிவனும் என்று கூறிற்று. சைவபுராணம்,

(G) யச்சேதம்க்ஷரமவ்யக்தம்யதப்யம்ருதமக்ஷரம்। தாவுபாவக்ஷராதமாநாவேகோதேவச்சுவயம் அர:॥ ஈசதே,

(இ—ள்.) க்ஷரமாயுள்ளது பாசம் (அவ்வியக்தம்), அமிர்தமாகிய அக்கரமாயுள்ளது பசு, பாசம் பசு என்னும் இரண்டையும் சுவயமே ஆளுபவர் சிவனும் அரனே (பரசிவனே) என்று கூறிற்று. மகாபாரதம்,

(H) த்வாவிமௌபுருஷௌலோகேக்ஷரச்சாக்ஷரஏவச। க்ஷரச்சர்வாணிபூதாநிகூடஸ்தோக்ஷரஉச்யதே। உத்தம:புருஷஸ்த்வந்யப்பரமாத்மேத்யுதாக்ருத:॥

(இ—ள்) உலகின்கண்ணே க்ஷரமென்றும் அக்கரமென்றும் இருதிறப் புருடர் உளர்; க்ஷரமாவது பாசம் (சர்வபூதங்களைத்தும்), எனவும் அக்கரம் பசு (கூடஸ்தன்) எனவும் சொல்லப்படும். பாசம் பசு என்னும் இரண்டிற்கும் வேறாய்ப் பரமபுருஷராயுளளவர் பரமான்மா (பதி) என்று சொல்லப்படுவர்.

☞ மேலே அத்தியாசிரம மந்திர பாசுபதயோக சுவேதாசுவதர சுருதி, சூதசங்கிதை, வாயுசங்கிதை, சங்கரசங்கிதை, மகாபாரதமுதலிய பற்பல இடங்களினின்று உதகரிக்கப்பட்ட வாக்கியங்களையெல்லாம் ஒருநெறியானே ஆழமாய் யோசிக்குமிடத்து அவையெல்லாம் சைவத்திற் பேசப்படும் நித்தியபதார்த்தமாகிய பதி பசு பாசமாமென்றும், அவை சாங்கியயோகபாக உபநிடதங்களிலே பேசப்பட்ட ஈசுவரமாவை அன்றென்றும், அதனால் அப்பதிபசுபாசத்தைச் சாங்கியயோகத்துட்பட்ட ஈசுவர மாயையாமென ஓர் போதுங் கொள்ளுதற்கிடனின்றும் என்றும். அப்படிப் பொருள்கொள்ளின் அது தெலுங்குபூமியல்லாத திராவிடபூமிக்குப் போய்த் தெலுங்கனொருவன் இராப்போதிலே சாவடியொன்றிற் புகுந்து தனது துரோட்டிக்கழியையும் பக்கத்துவைத்துத் தமிழனொருவனுக்கருகே நித்திரைசெய்ய யாமப்போதிலே நித்திரைமயக்கால் தமிழன் உருண்டுபடுத்து அவனுடைய தோள்ளைக்காதினுள்ளே கழி துரோட்டி புகுந்திடப்ப, உதயகாலத்து விடியுமுன்னர்த் தெலுங்கன் தன்கழியைத்தூக்க அது தமிழன் காதினுள்ளே புகுந்துநின்றமையால் இவன் வருத்தமுற்று அடே! காது! காது! என்று சொல்ல (இங்கே காது என்னும் பதம் தமிழனுக்குச் செவி எனவும் தெலுங்கனுக்கு அல்ல என்னும் பொருளினுமாமாதலில்) தெலுங்கன் கழிகொடுத்தற்கு உடன்படாது தமிழன் கழியைப் பிடித்துக்கொண்டு தர உடன்படாது இல்லை என்கின்றான் எனப் பொருள்பண்ணி மீட்டுங் கோபத்தோடு வலித்து இழுத்து ஒருவர்க்கொருவர் கலாம்விளைத்தமைபோல முடியுமென்றோர்ந்து பாசுபத உபநிடதங்களிற் போந்த பதிபசுபாசத்தைச் சாங்கியயோகத்துட்பட்ட ஈசுவரரெனப் பொருள்படுத்தி இந்த ஆரியனுராம் வேதாந்தியார் நம்மோடு வாதுசெய்யாராக.

வரும், சி. செ.

---

### சுயவரசு.

(ஐரோப்பாவின் தற்காலநிலை.)

உலகிலுள்ளாரனைவரும் தாம் தம்முளொருவருக்கொருவரும், மற்றும் சிருட்டிகளுக்கும், செய்யும் அதருமங்களைப் பிறர் தண்டனைகருதாது செய்யாதொழிவராயின், அரசரும் பார்லிமேந்து முதலிய சபைகளும் அவற்றால் விதிக்கப்படும் பல பிரமாணங்களும் வேண்டியதில்லை. இவ்வாசின்மையாகிய ஸ்திதியே எல்லோராலும் விரும்பற்பாலதாகவும், அதை அடைதலே எல்லா அரசுகள் நோக்கமாகவும் இருக்கின்றன. இப்போது உலகத்தில் உள்ளவர்களதும், பிரதானமாக ஐரோப்பாவில் உள்ளவர்களதும் நிலையைப் பார்க்கும்பொழுது இச்சுபகாலம் எப்போது வரப்போகிறதென்று சந்தேகிக்கவேண்டியதே. ஐரோப்பாவிலுள்ள அங்கிலேயர் பிராஞ்சியர் ருசியர் ஜர்மனியர் இற்றாலியர் ஆகிய சாதியார் எப்போது ஒருவரை ஒருவர் சேதஞ்செய்யலாமென்றும், எப்போது ஒருவர் இராச்சியத்தை ஒருவர் பிடித்துக்கொள்ளலாமென்றும் கோடிக்கணக்கான யுத்தவீரரை வைத்துக்கொண்டும், அமருயத்தியில் அளவிறந்த பொருள் செலவழித்துக்கொண்டு சமயம்பார்த்திருக்கிறார்கள். இப்போது ஐரோப்பாவிலுள்ள சேனைவீரர்தொகை இரண்டுகோடியே இருபதுலக்ஷமாம். இது நமது இலங்கைத்தீவிலுள்ள சனத்தொகையினும் எழுமடங் கதிகமாகிறது. இவ்வளவு பெருந்தொகையினரை வேலைசெய்து உழைத்துத் தம் தேசச்செல்வத்தைப் பெருக்கவிடாது, மற்றவர்கள் உழைத்த பெரும்பொருள்கொண்டு காப்பாற்றி, யுத்தஞ்செய்யப் பழக்குதல் தேசத்துக்கு இருவிதமான கஷ்டத்தை விளைவிக்கின்றதென்பதும் தாம் அனுசரிக்கும் கிறிஸ்துசமயத்திற்கு இழிவைக் கொடுக்கின்றதென்பதும் அநேகபுத்திமான்களது எண்ணம்.

இவ்வைரோப்பியர்கள் தம்மளவில் நில்லாது, ஆசியா ஆபிரிக்கா அமெரிக்கா முதலிய பிறதேசங்களுக்கும் போய் அங்கே அதிகம் யுத்தப்பயிற்சியில்லாது சமாதான விருப்பமுடையராயிருந்த சாதியார்களையும் அதஞ்செய்து, அவர்கள் சுவாதீனத்தையும் கெடுத்து, அவர்கள் பொருளையும் அபகரித்து, அவர்களையும் புறக்கணித்துச் சிறைகள்போற் பாவிக்கிறார்கள். தற்காலத்தில் ஐரோப்பிய சாதியார் ஆபிரிக்காக்கண்டத்தில் செய்வதெல்லாம் இதற்குப் போதிய சான்றாகும். இதுவுமல்லாமல், தாம் வென்று கீழ்ப்படுத்திய தேசங்களில் வியாபார நயங்கருதி மஸ்துள்ள குடிவகைகளைக் குடித்தல் முதலிய தம்தேச துராசாரங்களையும் தம்மைச் சேவகாருண்ணியமில்லாதவராகவும் அதனால் யுத்தநேயர்களாகவுஞ் செய்த கிறிஸ்துசமயத்தையும் பரவச்செய்கிறார்கள். சிலகாட்களின்முன் இங்கிலாந்தில் பிறீறிஷ் அசோஷியேஷன் என்னும் சபையில் ஒரு அங்கிலேய பண்டிதர் "விவிலியமும் வீர்ப்போத்தலும் கைகோர்த்துப் போகின்றன." என்று சொல்லியது மிகவும் சரியே.

இப்படி ஐரோப்பியர் பிறசாதியாரது நிலம்முதலிய நிதிகளையும் அவர்கள் சுவாதீனத்தையும் அபகரித்தல் அவர்கள் இடைவிடாது பிரசங்கிக்கும் இராஜநந்திர முறைகளுக்கு ஒத்ததோ என்பதைச் சற்று ஆராய்வாம். அவர்கள் சொல்வதாவது, ஒருதேசத்தில் உள்ளவர்கள் தந்தேசத்தவர்களோடும் பிறதேசத்தவர்களோடும், தருமநெறியிற் சமாதானமாயிருத்தல் அவர் இயல்பில் இல்லையாதலின் அவர்களை நீதிநெறியில் நிறுத்தவும் அப்படி நில்லாதோரைத் தண்டிக்கவும் வல்லமையுள்ள ஒருவன் அல்லது ஒருசபையார் வேண்டியவராயும், இச்சபையாரை இத்தொழிலில் நிறுத்தப் பொருள் வேண்டியதாயும் வரும்.

இத்தேவைதோன்றவே அத்தேயத்தாரெல்லோரும் ஒருங்குசேர்ந்து தம்முள் அநேகர் சம்மதப்படி தம்மை ஆள்வதற்கும், அதற்குவேண்டிய பொருளைத் தம்மிடம் அறவிடுவதற்கும்; தத்துவத்தைக்கொடுத்துச் சிலரை நியோகிப்பார்கள். இவர்களுக்கே இறைவிதித்தல், சட்டங்கள் ஏற்படுத்துதல் (Taxation and Legislation) ஆகிய இரு இராஜதத்துவங்களும் உண்டு. இத்தத்துவங்கள் இவர்களுக்குத் தெய்வாதீனமாகக் கிடைத்தனவல்ல. இவர்கள் தம் செய்கைகளுக்கெல்லாம் தம் தேயத்தவருக்கே உத்தரவாதிகளாயிருக்கிறார்கள் இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள எவ்வரசராவது ஜனப்பிரதிநிதிகள் சபையின் உத்தரவின்றி இறைப்பொருள் விதிக்கவாவது நியாயப் பிரமாணங்களை ஏற்படுத்தவாவது துணிவதில்லை. அப்படித்துணியின் அத்தேயத்தவர்கள் அவர்களை விடப்போவதுமில்லை. அப்படித் துணிந்தல்லவா இங்கிலாந்தின் அரசனுகிய முதலாம் சாள்ஸைப் (Charles I) பிரசைகள் சிரச்சேதம் செய்ததற்கும் வேறும் ஐரோப்பாவில் நடந்த அநேக தேசகலகங்களுக்கும் காரணம். வரும்.

இங்ஙனம்
சுவதேச தாசன்.

---

## அநுவாதம்.

---

### தேவாலயசொத்துக்களைப் பரிபாலிப்பதற்கான சட்டம்.

(ஆரியசனப்பிரியன்.)

தேவாலய காரியங்களைத் தர்மகர்த்தர்கள் சரியாய்ப் பரிபாலனம் செய்யாமல், சொத்துக்களைத் துர்விநியோகம் செய்வதை நமது ஜனங்கள் பொறுக்காமல் அவைகளைச் சரியாய்ப் பரிபாலிக்கத்தக்க ஓர் சட்டம் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை அடிக்கடி கேட்டுக்கொண்டார்கள். ௧அ௬௩ வது வருஷத்தில் இவ்விஷயத்தைப்பற்றி ஓர் சட்டம் பாசாயிற்று. அனுபவத்தில் அந்தச் சட்டம் பிரயோசனப்படவில்லையென்று கண்டு திருத்துப்பாடுசெய்ய வேண்டுமென்று கேட்க, மாகாண கவர்ன்மெண்டார் சுதேச கனவான்களடங்கிய கம்மிஷன் ஒன்று சேர்த்து ஓர் மசோதாவைத் தயார்செய்யச் சொன்னார்கள். அதற்குக் கனம் ஸர். டி. முத்துசாமி ஐயர் அவர்கள் அக்கிராசனாதிபதியாகவிருந்தார். அக் கம்மிட்டியாரால் செய்யப்பட்ட மசோதாவை மாகாண கவர்ன்மெண்டார் ஒத்துக்கொண்டாலும் இந்தியா கவர்ன்மெண்டார் ஒத்துக்கொள்ளவில்லை. அந்த மசோதாவில், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள். மதவிஷயங்களில் நேராய் நுழையும்படியான ஏற்பாடுகளிருப்பதால், அந்த மசோதா உதவாதென்றார்கள் இப்போது கவர்னர் சபையில் ஓர் அங்கியாகிய கனம் கலியாண சுந்தரமையர் அவர்கள் மேற்குறித்த ஆக்ஷேபங்களை நீக்கி, ஓர் மசோதா கொண்டுவந்திருக்கிறார். கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருடைய உதவி எதுவரையிலும் தேவையோ, அதுவரையிலும் பெற்றுக்கொள்ளவும் மற்றப்படி அவர்களைத் தேவஸ்தானவிஷயங்களில் நேராய் நுழைய விடாமலும் ஏற்பாடுகள் அதில் இருக்கின்றன. ௧அ௬௩ வருஷத்திய சட்டத்தில் என்னென்ன குறைகள் இருக்கின்றனவென்று அனுபவத்தில் காணப்பட்டதோ அவைகளுக்கெல்லாம் இந்த மசோதாவில் பரிகாரம் ஏற்பட்டிருக்கின்றன. கடைசியில் தேவஸ்தான வரும்படியில் மிச்சமிருந்தால் கோவிலுக்கு வருகிறவர்களுக்கு மதசாஸ்திரங்களைப் போதிக்கும்படியான ஒரு ஏற்பாடுமிருக்கின்றது. அந்த மசோதா பாசாகும் பக்ஷத்தில் தேவஸ்தான அக்கிரமங்கள் ஒழிந்துபோகுமென்பதற்குச்சந்தேகமில்லை.

—:o:—

# THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY APRIL 1, 1896

## *OUR STAPLE PRODUCT.*

The weal or woe of this Peninsula depends in a great measure on the success or failure of tobacco cultivation. If the crop be a good one, and if the tobacco could be readily sold here for a high price, the country is said to be prosperous. If, on the other hand, the crop be a failure, or the price be low, the result is depression throughout the length and breadth of Jaffna. Our readers might remember the state of feeling here, a few years back among merchants and cultivators, at the prospect of the Jaffna tobacco being shut out of the Travancore market, owing to the establishment of a differential duty there inimical to this tobacco But, thanks to the good offices of our Government, that duty was removed; and our tobacco has been for the last three years sold there for an unprecedentedly high price to the great benefit of the merchants engaged in that trade, and of the cultivators here. Encouraged by this state of things the area under tobacco cultivation in Jaffna has so far increased that fears are now entertained that the supply has already exceeded the demand.

Jaffna supplies not only the greater portion of the tobacco consumed in the Island itself but has been also from time immemorial supplying almost the whole quantity of tobacco required for the consumption of the people of Travancore and Cochin. But, according to the latest intelligence, the price of Jaffna tobacco has lately gone down, in every market, on account of large stock out of last year's tobacco yet remaining to be sold, and in view of this year's crop here promising to be an unprecedentedly large on. The out-look therefore, is not at all promising. Either the people of Jaffna should, in future, turn their attention to some new products and turn out less quantity of tobacco, or they should find new markets for their surplus product.

But the varieties of tobacco cultivated here and the mode of curing and manufacturing it, would suit no other markets than those of Ceylon and of the Malabar Coast which is the only market for this staple of Jaffna outside the limits of this Island. The people have been growing these varieties from time immemorial, and there has been also no change introduced in the mode of curing and manufacturing the tobacco, to suit the other markets of the world. Except the tobacco grown in the Pachilaipali Division and parts of Tenmarachi Division which is cured and manufactured into, what is called, Jaffna cigars, and consumed in different parts of Ceylon, the whole quantity of this product raised in this Peninsula is used for chewing purposes by the Singalese population of the Island and the immigrant coolies labouring in the estates, and by the people of Travancore and Cochin. The quantity exported annually to these States alone till two or three years back was about 50,000 bales—a quantity sufficient for their consumption. But the export to Travancore and Cochin of last year's tobacco from here is believed to be about 70,000 bales. Hence the fall of price that has already taken place in those markets.

We see no reason why, with the introduction of new varieties of tobacco and improved methods of curing the leaves and manufacturing the cigars, Jaffna tobacco and cigars may not be sent to other markets of the world and find a ready sale there. If our merchants and cultivators would show one hundredth part of the perseverence and energy shown by the European planters of Ceylon in finding new markets for Ceylon tea, the sale of Jaffna tobacco will not be, as it is now, confined to the markets of this colony and to the native states of Travancore and Cochin. But it should be borne in mind that even the European merchants and planters, with all their scientific knowledge of agriculture and manufactures, the facilities they enjoy by belonging to the ruling nation in the world, and the immense wealth they have at their command, receive the encouragement and support of the Government in their endeavours to push on trade and find new markets for their products. Large amount of public money was spent by the Ceylon Government in connection with the Chicago Exhibition with the object of capturing the American market for Ceylon tea, not to mention other instances of Government support having been accorded to the Ceylon Planters. We do not blame the Government for it. On the contrary we commend their far seeing policy in thus fostering the leading industry of the Island, which cannot fail to beneficially affect the whole population of the colony. What we however, contend is that the Government should show greater encouragement and afford greater support to the promotion of native industries and manufactures, by introducing new varieties of the products cultivated by them and assisting them in finding new markets for their sale. Government help and example alone will arrest the stagnation that is sure to set in here, as the result of the Ceylon and Travancore markets being glutted with an over-abundant supply of this tobacco. We earnestly hope that Mr. Ievers, our new Government Agent will adopt such measures as will have the effect of introducing into Jaffna finer varieties of tobacco and making the people learn better methods of curing it to suit other markets of the world. It may be safely depended upon that the inhabitants of Jaffna with their wonted intelligence, energy and enterprise will not be slow to profit by any example the Government may set to them.

Since the above was in type we have come accross the following paragraph in the "Hindu" of Madras, which we hope will be read with interest:—

Mr. C. Tripp read a paper on February 27th. at the Imperial Institute. on. "The Tobacco Industry of India and the Far East," the meeting (over which Lord Harris presided, in the absence of Lord Lorne, M. P., who is on the Continent) being held in connection with the Indian Section of the Society of Arts. The part of the paper that evoked the loudest applause was that describing the system of co-operation. as between labour and capital, that prevails on the plantations of Sumatra. Mr. Tripp is anxious that the quality of Indian tobacco should be improved. He cannot bring himself to believe that the soil of India can "aspire to the perfection of Sumatra," but the climate is all can be desired. Therefore, why does India produce that "coarse, thick-ribbed pungent tobacco" that is "quite unsaleable in Europe?" Mr. Tripp suspects that inferior culture has a great deal to do with it. Nay, he went so far as to indicate where the Indian growers and curers are at fault. The plants are "topped" too soon. the newly-reaped tobacco is exposed too long to sun and light, and the fermentation is not properly understood. Mr. Tripp looks forward to the time when the British smoker will consume cigars produced from British soil, with British capital, and made by British hands. For why do we import 80,000,000 cigars from the Continent every year? Mr. Tripp answers that question in one word —prejudice.

## LOCAL AND GENERAL.

Ourselves—Owing to the Hindu New Year our next issue will be on the 22nd Instant instead of on the 15th.

The Weather—A shower of rain fell on the 29th Ultimo in several parts of the District, which was not however, sufficient to allay the intense heat. Although that shower extended to the suburbs, yet, beyond slight drizzles no rain fell in the Town which is still suffering from the effects of the prolonged drought.

Mr. J. J. Casie Chitty—We congrátulate this gentleman on his permanent appointment as Police Magistrate of Chilaw. Mr. Casie Chitty has for a number of years held the acting appointment of Police Magistrate of Point Pedro and Chavakacheri, and we have often in these columns advocated his claims for a permanent office in the Civil Service. We are, therefore, glad that justice has been done to him at last. Mr. Casie Chitty will continue to act at Point Pedro and Chavakacheri until further orders.

The Attorney-General—On Mr. Layard's departure this month. Mr. Ramanathan will act as Attorney-General and Mr. Templer who is expected back in the Island in the course of the month, as Solicitor-General.

—Mr Ellankayer, says the Colombo correspondent of the local Patriot, who is the statistical clerk at the Registrar General's Office Colombo has with the sanction of Government arranged for an exchange of duties with Mr. Abeyawickrema, the third clerk in the office of the Principal Civil Medical Office.

The Government Agent—Mr. Ievers is still on circuit in the Wanni Districts

The Conference of Savite Teachers—This took place in the Hindu College on Saturday the 21st ultimo under the presidency of Mr. T. Kailasapillai. There were present nearly 60 teachers representing the Saivite Schools in the District.

### THE NEW GOVERNOR OF MADRAS.

Sir Arthur Havelock arrived in Madras on the 18th ultimo and immediately assumed the Government of that Presidency. We are glad to find that His Excellency has created a favourable first impression. We have every reason to believe that Sir Arthur will prove a very successful and popular ruler of the Southern Presidency of the Indian Empire. His Excellency has undoubtedly begun well, if what an Indian contemporary says be true. The "Madras Times" says:—

We are credibly informed that His Excellency the new Governor of Madras has issued a notice to the Heads of all Departments of the Government office to the effect that all communications to be forwarded to the Government of India from the Madras Government, except those that relate to mere matters of routine. shall first be sent to His Excellency for approval. This looks at least as if our new Governor meant business, and as if, like the German Emperor at his accession, he meant to free himself from the several Bismarcks that might have imagined they were going to be allowed to steer the official ship at their own will. The Governor has shown his advisers that he is not going to content himself with walking the quarter-deck like an ornamental skipper, leaving the bridge and the wheel house to his mates. He is at least going to read the bearings for himself, and if the ship is to go to pieces on the rock of any unfortunate G. O., he will at least have made himself responsible for the disaster. Sir Arthur Havelock has passed the new order at an opportune time. A move like this is always best done when authority is first taken in hand. A few months later and the order might have come invidiously; passed, as now, it reflects directly on no one. The Governor is to be congratulated on this assertion of his own position, and we trust that the result will be that the Madras Government will be spared any more of those unfortunate mistakes that enable the Philistine of Allahabad and elsewhere to triumph.

## CORRESPONDENCE.

### OUR WASTED WEALTH AND HOW TO UTILISE IT.

( I )

Our wasted wealth? yes our wealth wasted! The suggestion that the red-caps—the patrols of King Demos,—familiar only to those who frequent the public offices in Jaffna and in all probability unknown to many who frequent the thoroughfares and the crowded crossings of our town and its suburbs, constitute the waste wealth of the community, will no doubt come to most of my readers with a certain shock of surprise, and prompt them to interrupt me with queries such as the following;—Red-caps, the patrols of King Demos? Who are they? How is our wealth wasted on them? and so on.

First as to "who are they?" They are our Policemen—not all, mark you, who are supposed to be on patrol duty in our streets. They are the men in red-caps who in civilized countries are responsible for the protection of the weak, the helpless and the injured but who in Jaffna, do not seem to realise fully this most important duty of theirs. Now as to "How is our wealth wasted on them?"

To answer this query it is very necessary that I should be very circumspective and cautious. I have studied this question from several standpoints, and as such I make bold to interrogate "Where is the necessity for such a big staff (nearly 100 in all) of Policemen for Jaffna? Are the people of Jaffna less loyal or less law-abiding or more troublesome or more blood-thirsty, than those of the neighbouring districts of Trincomalie or Batticaloa, where not even one eighth of the number of the police in Jaffna. is quartered? Experience—not of ordinary men, but of men eminent for their right observation and right judgment—has proved beyond the least shadow of doubt that this is not the case. Then what was it that made our paternal Government to place us under—such a heavy burden—a burden that— considering the amount of hard earned money we pay for their maintenance and the benefits we derive by their services in return —is likely sooner or later, to crush us gradually down into poverty and despair? I speak authoritatively on this point having lately had occasion to observe the hardship and embarrassment which the poor householders of Jaffna had to undergo when a batch of clerks from the Kachcheri was despatched to destrain property for default of Police rates.

Is Jaffna so overflowingly rich as to afford to keep up a luxury of this kind? A luxury. I say, because the Police of Jaffna have been no more than a curiosity and fancy—pleaser to the *one* who, in his unmilitary helmet, used to attend the Friday parades of these 'brave soldiers in blue and receive military salutes. such as presenting arms, marching past &c in imitation perhaps, of royal salutes by regular soldiers in an army.

Roland

Jaffna 31st March 18/96

PRINTED AND PUBLISHED BY V. CHUPPIRAMANIA PILLAI FOR THE PROPRIETOR AT THE SAIVA PRAKASA YANTRA OFFICE JAFFNA.